23rd April 1959]

SRI T. R. RAMAMIRTHA THONDAIMAN : போலீஸ் நாய்களில் ஒரே ஜாதி நாய்கள் இருப்பதால் அந்த ஜாதயை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா? அதை எல்லா இடங்களிலும் ஜில்லாவாரியாக அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த மாதிரி ஒன்றும் அவசியம் இல்லை. சென்னையில் திருப்திகரமாக அது பயன்பட்டு வருகிறது. அவசியம் ஏற்பட்டால் ஒவ்வொரு ஸ்தலத்திலும் வைக்க ஏற்பாடு செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு யோசனையும் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

MR. SPEAKER : Next question.

SRI A. A. RASHEED : Sir, I have been raising my hand to catch your eye to put a supplementary on the previous question.

MR. SPEAKER : I think the hon. Member must know that to catch the Speaker's eye, is always a most difficult thing. Not only the hon. Member, but also the members of legislatures all over the world have found it very difficult. Question No. 102.

Health Officers

* 102 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of Health Officers as on 31st December 1958; and

(*b*) how many of them were superannuated and re-employed in 1958?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 88.

(*b*) 22.

SRI N. K. PALANISAMI : போதுமான ஹெல்த் ஆபீசர்கள் இல்லாத காரணத்தாலும் சரியான ஆபீசர்களைப் நியமிப்பதன் காரணமாகவும் இருப்பதால் இப்பொழுது இருக்கக்கூடியவர்களுக்கு அதிகப்படியான படிப்பு கொடுத்து சலுகை காட்டி அவர்களை உத்தியோகங்களில் போட சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவர்களுக்கு ஜி. சி. ஐ. எம். பாஸ் செய்த எட்டு பேர்களை நியமிக்கவேண்டும். நான்கு பேர்களுக்கு உத்தரவு அனுப்பியதில் ஒருவர் வரமாட்டேன் என்கிறார். ஆகையால் வேறுவிதமான டாக்டர்களுக்கு கொஞ்சம் தயாரிப்பு கொடுத்து அவர்களை நியமிக்க ஏற்பாடு செய்யப்படும். அது பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM : வேலையிலிருந்து விலகி ஓய்வு பெற்ற பிறகு மறுபடியும் நியமித்திருந்தும் என் கன்யாகுமரி ஜில்லாவிற்கு ஹெல்த் ஆபீசர் நியமிக்கப்படவில்லை.

[23rd April 1959

MR. SPEAKER : இந்த மூலக் கேள்வியின்மேல். கன்யாகுமரியைப்பற்றி கேட்கக் கூடாது. ஆனால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

THE HON. SRI M A. MANICKAVELU : கன்யாகுமரி ஜில்லா சின்ன ஜில்லா. அதை திருநெல்வேலி ஜில்லா ஹெல்த் ஆபீசர் அவர்களே பார்த்துக் கொள்ளலாம். அங்கே நல்ல வயதுடையவராகப் போடப் பட்டிருக்கிறது.

SRI C. MUTHIAH : சானிடரி இன்ஸ்பெக்டர்களாக வந்து விட்டவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து, கடைசிவரையில் உத்தியோக உயர்வுக்கு வழியே இல்லாத காரணத்தினால் அவர்களை ஹெல்த் ஆபீசர்களாகப் ப்ரமோஷன் செய்வதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பே சொன்னேன். மற்றவர்களுக்கும் அதற்குவேண்டிய யோக்கியதாம்சங்கள் இருந்தால் அவர்களையும் போடுவதற்கு யோசனை செய்யலாம்.

SRI R. SRINIVASA IYER : What is the pay of these Health Officers? Is the low salary the reason for a large number of people not coming in?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, that is one of the reasons. The present scale is Rs. 160—600. There is a proposal to increase the scale.

SRI T. SAMPATH : Will the Government consider the question of increasing their salary?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI S. LAZAR : ஓய்வு பெற்றவர்களைத் திரும்பவும் வேலைக்கு அமர்த்துகிறபோது மற்றவர்களுடைய ப்ரமோஷன் ஏதாவது பாதிக்கப் படுகிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒன்றும் பாதகம் இல்லை.

SRI J. MATHA GOWDER : ஆன்டி மலேரியல் ஸ்கீமில் வேலை செய்யக்கூடியவர்களேயும் இப்படி ஹெல்த் ஆபீசர்களாகப் ப்ரமோஷன் செய்வதற்கு யோசிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மலேரியல் கண்ட்ரோல் ஸ்கீம் இப்போது எராடிகேஷன் ஸ்கீமாக மாற்றப்படுகிறது. அதற்கே ஏராளமான அதிகாரிகள் வேண்டும். ஆகவே இதைப்பற்றி ஒன்றும் கவனிக்க வேண்டாம்.

Camphor

* 103 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there is scarcity of camphor in the market; and

(*b*) if so, the reason therefor?